வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ஈழநாடு




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.06.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 166 பக்கங்கள் : 12

# தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசு முடிவு எடுக்கவில்லை

## பிரதான கட்சிகளின் அறிக்கைகளின் பின்னரே தீர்மானம் என்கிறார் மாவை



யாழ்ப்பாணம், ஜூன் 14

**தமிழ் பொது வேட்பாளர் விடயம் குறித்து இலங்கை தமிழ் அரசு கட்சி இன்னும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை. தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையை பார்வையிட்ட பின்னரே அது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். சிலர் தமது தனிப்பட்ட கருத்துகளை வெளியிட்டாலும் அது எமது கட்சியின் முடிவல்ல - இப்படி தெரிவித்திருக்கிறார் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா.**

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு குறித்து 'ஈழநாடு' எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து தெற்கிலுள்ள பிரதான கட்சிகளிடம் நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறி வருகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி. பியின் தலைவர் அநுர குமார ஆகியோர் எங்களை சந்தித்து இப்போது பேசியிருக்கிறார்கள்.

11



# ஊடகவியலாளரின் வீட்டின் மீது அதிகாலைவேளையில் தாக்குதல்

## சொத்துக்களுக்கும் சேதம் அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது வன்முறை கும்பல் புகுந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்களுக்கும் குறித்த கும்பல் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

அச்சுவேலி பத்தமேனி காளிகோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டினுள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில், இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் அடங்கிய வன்முறைக் கும்பல் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்து தாக்குதலை

11

# இலங்கைக்கு கடனாக 336 மில்லியன் டொலர்!

## மூன்றாவது தவணையாக வழங்க ஐ. எம். எவ். அனுமதி

நியூயோர்க், ஜூன் 14

இலங்கைக்கு வழங்கிய நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது தவணைக்கான கொடுப்பனவாக 336 மில்லியன் (33.6 கோடி) டொலரை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) அனுமதி அளித்துள்ளது.

இதன் மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஐ. எம். எவ்வின் நிதி உதவி 100 கோடி டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் இரவு

11




# ஜனாதிபதி ரணிலுடன் இணையவே மாட்டேன்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

- மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஒருபோதும் நான் அரசியலை முன்னெடுக்கப் போவதில்லை" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கனவே அறிவித்தது போன்று நடைமுறைப்படுத்துவதில் பின்வாங்கப் போவதில்லை என்றும்

11

# வாள்களுடன் வந்த குழு பணம், நகையை திருடியது

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வட்டுக்கோட்டையில் வீடு ஒன்றுக்குள் புகுந்த வாள் வெட்டுக் குழு அங்கிருந்த பொருட்களை அடித்து நொறுக்கியதுடன், 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் பணம், 5 பவுண் நகைகளையும் திருடிச் சென்றுள்ளது.

வட்டுக்கோட்டையில் நேற்று மதியம்

11

# பல்கலை. அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஜூன் 14

2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இன்று வெள்ளிக்கிழமை முதல் இணையவழியில் விண்ணப்பிக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை பெறுபேறுகளின்படி பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்ற மாணவர்கள் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசித்து விண்ணப்பங்களை

11

# 'இந்து சகோதரர்களின் சமர்' பெருந்துடுப்பாட்டம் இன்று!




யாழ்ப்பாணம், ஜூன் 14

சாவகச்சேரி இந்துக் கல்லூரி - மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 'இந்து சகோதரர்களின் சமர்' எனப்படும் பெருந்துடுப்பாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் இந்தப் போட்டி இரு நாட்களை

11

# அனலைதீவு மீனவர்களை அழைத்து வர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

படகின் இயந்திரம் பழுதடைந்தமையால் தமிழகத்தில் கரையொதுங்கிய அனலைதீவை சேர்ந்த மீனவர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்களான திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ, நாகலிங்கம் விஜயகுமார் காணாமல் போயிருந்தனர். படகு பழுதடைந்தமையால்

11

# சிறாரின் ஆபாச படங்கள் இணையத்தில் அதிகரிப்பு

- இது மிகவும் ஆபத்தான கட்டம்
- தினமும் அதிக வழக்குகள் பதிவு

கொழும்பு, ஜூன் 14

பதின்ம வயதினரின் ஆபாச காணொலிகள் மற்றும் படங்கள் இணையத்தில் பதிவேற்றப்படுவது தொடர்பான வழக்குகள் நாட்டில் ஆபத்தான அளவில் அதிகரித்து வருகிறது என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க வடக்குக்கு தலைவர்கள் படையெடுக்கத் தொடங்கியி ருக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க வந்து போனார். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வந்து சில தினங்கள் இங்கேயே இருந்து பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கிவிட்டு - பல வாக்குறுதிகளையும் வழங்கி விட்டு நேற்றைய தினம் கொழும்பு திரும்பியிருக்கிறார்.

அவர் போவதற்கு முன்னதாகவே இங்கு வந்த ஜே. வி. பி. என்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க பல்வேறு தரப்பினரையும் சந்தித்து திரும்பியிருக்கிறார்.

இந்த மூவரும் நாம் சைவ ஆலயங் களுக்கு அர்ச்சனை தட்டு எடுத்துச் செல்வதுபோலவும் அந்த அர்ச்சனைத் தட்டில் அர்ச்சனை பொருட்களுடன் பதின்மூன்றையும் எடுத்துச் செல் வதுபோலவும் கார்ட்டூன் ஒன்றை சிங்கள நாளேடு ஒன்று வெளியிட் டிருக்கின்றது.

அதில் முதலாவதாக ரணில் நிற்கிறார், அவர் கையில் இருக்கும் அர்ச்சனைத் தட்டில் பதின்மூன்றும் இருக்கிறது. அடுத்ததாக சஜித் அவர் கையிலும் அதேபோன்ற ஒரு தட்டு இருக்கின்றது. அவர் பின்னால் அநுர குமார நிற்கிறார். அவர் கையில் இருக்கும் அர்ச்சனைத் தட்டில் பதின்மூன்றை ஒரு துணியால் மூடிக் கொண்டு நிற்கிறார்.

முதலாமவர், பதின்மூன்றை இந்தியாவின் நெருக்குதல் காரணமாக நாட்டின் அரசமைப்புக்குள் கொண்டு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பெறாமகன். இப்போது பதின்மூன்றை பொலிஸ் அதிகாரம் இல்லாமல் தான் அமுல்படுத்துவேன் என்கிறார். இப் படிச் சொன்னாலும், அவர் மனதில் என்ன இருக்கின்றது என்பது தெரிய வில்லை. அவர் உண்மையிலேயே நிறைவேற்றவேண்டும் என்று நினைத் திருந்தால், கடந்த இரண்டு வருடங் களாக நிறைவேற்று அதிகார ஜனா திபதியாக இருக்கின்றபோதே செய்தி ருக்கலாம். அப்படி ஏன் செய்ய வில்லை என்று கேட்டால், அதனை நிறை வேற்றினால் அடுத்து வருகின்ற ஜனா திபதித் தேர்தலில் சிங்கள கடும்கோட் பாளர்கள் வாக்களிக்காமல் விட்டுவிடு வார்கள் என்கின்றனர் அவருக்கு நெருக்கமானவர்கள். அது நியாயமான கவலைதான். ஆனால் அவரே, பொரு ளாதாரத்தை தூக்கி நிமிர்த்துவதற்காக ஐ. எம். எவ். என்ற சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனை களை ஏற்றுக்கொள்கின்றார். அவைகூட சிங்கள கடும்கோட்பாளர் களுக்கு மாத்திரமல்ல, சாதாரண மக்களுக்கும் சுமையை தலையில் சுமத்துவதுதான். ஆனாலும், அவர் நாட்டை பொருளாதார நெருக்கடியி லிருந்து மீட்டெடுக்க அந்த சுமைகளை மக்கள் தாங்கித்தான் ஆகவேண்டும் என்று சமாதானம் சொல்கிறார்.

இதேபோல, இந்த இனப்பிரச் னைக்கும் இந்தச் சிறிய விடயத்தை யாவது நாம் செய்யவில்லை என்றால், நாடு உருப்படாது என்று சொல்லி, அதனை சிங்கள மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய அவர் நினைக்க வில்லை. அவரைப் பொறுத்தவரை நாற்பது வயதுக்கு மேற்பட்ட தமிழர் கள்தான் இந்த பிரச்னைகள் பற்றி பேசுகிறார்கள். இன்னமும் சில காலம் இதனை இழுத்துவிட்டால் மிச்சமாக இருக்கின்ற தமிழர்கள் எதனையும் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கின்றார்.

இரண்டாமவர், சஜித் பிரேமதாஸ. இந்த பதின்மூன்றை அரசியலமைப்பில் சேர்ப்பதற்காக இந்தியாவும் இலங் கையும் ஒப்பந்தம் செய்தபோது - அதாவது, அப்போதைய அதிபர் ஜே. ஆரும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி யும் ஒப்பந்தம் செய்தபோது, ஜே. ஆரின் அரசில் பிரதமராக இருந்தவர் ரணசிங்க பிரேமதாஸ. அவர் அரசாங் கத்தில் இருந்துகொண்டே, அந்த ஒப்பந்தத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்த வர். அவரின் புதல்வர் சஜித் பிரேம தாஸ, இப்போது பதின்மூன்றை முழு மையாக நிறைவேற்றுவேன் என்று யாழ்ப்பாணத்தில் அறிவிக்க, அவரின் கட்சிக்காரர் ஒருவர், சமூக பொலிஸ் அமைக்கப்படுமே தவிர பொலிஸ் அதி காரம் வழங்கப்படமாட்டாது என்று மறுத்திருக்கிறார். அவரின் மறுப்புக்கு இன்னமும் சஜித் தரப்பிலிருந்து எதிர்க் கருத்து வரவில்லை என்பதும் கவனிக் கத்தக்கது.

மூன்றாமவர், ஜே. வி. பியின் அநுரகுமார. அவர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத் தில் அதற்கு எதிராக ஆயுதம் ஏந்தி சன்னதமாடியவர்கள். அந்த ஒப்பந்தத் துக்கு எதிராக மாத்திரமல்ல, இந்தி யாவுக்கு எதிராகவும் போராடியவர்கள். அதன் உச்சமாக இந்தியப் பொருட் களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று அவர்கள் அறிவிக்க, அதனை மீறி இந்தியாவிலிருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்து திரையிட்ட ஒரே காரணத்திற்காகவே "சினிமாஸ்" குண ரட்ணம் என்ற பிரபல தமிழ் தொழில திபர் அவர்களால் படுகொலை செய்யப்பட்டார். இது ஒரு சிறிய உதாரணம் மாத்திரமே. அவர்கள் அந்தக்காலத்தில் செய்த சம்பவங்களை பட்டியலிடுவதெனில் அதற்கு இந்தப் பத்தி போதுமானது அல்ல. தமது யாழ்ப்பாண வருகையின்போது, தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்துக்கு சென்று தலைவர் மாவை சேனாதிராசா, துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞா னம், கட்சியின் முடிவுகளை தனித்து எடுக்கக்கூடிய மதியாபரணம் ஆபிர காம் சுமந்திரன் (இப்படி அவர் பெயரை எழுதினால் சிலருக்கு பிடிப்ப தில்லை. அதுபற்றியே ஒருநாள் இந்தப் பத்தியில் பார்ப்போம்) ஆகியோரை சந்தித்தபின்னர் அவர் கூறியது:

"தேசிய இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப் படவேண்டும். அதுவரையில் மாகாண சபை முறைமையை - அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கம் செய்வோம்".

நல்லாட்சி காலத்தில் நமது தலை வர்கள் புதிய அரசியலமைப்பை உருவாக்குகின்றபோது கூறிய வாக்கு றுதிகளை இந்த வேளையில் உங்களுக்கு ஞாபகம் வருவதை என்னால் தடுக்க முடியாது. அதுசரி, புதிய அரசியல மைப்பில் பதின்மூன்று இருக்காது என்பது தெரியும். ஆனால், இந்த மாகாண சபைகளாவது இருக்குமா? அல்லது அவையும் காணாமல் போய் விடுமா என்பதையல்லவா சொல்லியி ருக்கவேண்டும். ஆகக்குறைந்தது, வெடுக்குநாறிமலையில் நம்மவர்கள் கைதுசெய்யப்பட்டபோதோ அல்லது மட்டக்களப்பில் நமது பண்ணையா ளர்களின் மேய்ச்சல்தரைகள் கபளீகரம் செய்யப்பட்டபோதோ கண்டுகொள் ளாதவர்கள் இவர்கள்.

தேர்தல் நடந்து முடியும் வரை இது போன்ற அறிவிப்புகளை நாம் கேட்கத்தான் வேண்டியிருக்கும்.

ஊர்க்குருவி

## இன முரண்பாட்டை ஏற்படுத்தவே யாழ்ப்பாணத்தில் மாடுகள் திருட்டு

### ஈழம் சிவசேனை அமைப்பு சொல்கிறது



யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணத்தில் நடக்கும் மாட் டுத் திருட்டு இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் நடக் கும் செயல் என்று ஈழம் சிவசேனை அமைப்பு தெரிவித்துள்ளது.

மறவன்புலவு சச்சிதானந்தத்தை தலைவராகக் கொண்ட அந்த அமைப்பு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

மட்டுவிலில் காணாமல் போன மாடுகள். துன்னாலையில் முகமதிய (முஸ்லிம்) கள்வர் ஒளித்து வைத்திருந் தனர். சட்டங்களை மீறி இறைச்சிக்காக வெட்ட முயன்றனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தார் விரைந்து செயல்பட்டனர் - புலனாய்ந் தனர். துன்னாலைக்கு சென்றனர் மாடு களை மீட்டனர். முகமதிய கள்வரை கைது செய்தனர். அந்தக் கள்வரைச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னி லையாக்கினர்.

பசு பாதுகாப்பு சைவ மக்களின் கடமை. பசுவை பாதுகாக்கும் அரசைப் பாராட்டுவது சைவ மக்களின் கடமை. சவுதி அரேபியாவில், மேலும் பல முக மதிய நாடுகளில், பன்றி இறைச்சிக்கு தடை. அங்கு பன்றி இறைச்சி விற்றால் தலையைக் கொய்வார்கள்.

தன் மகன் பசுக்கன்றை தேர்ச்சில் லால் கொன்றான் என்பதற்காகத் தன் மகனின் தலையைக் கொய்த எல்லா ளனை மகாவம்சம் பாராட்டிக் கூறும்.

எனவே அடியார் விபுலானந்தர், சிவ தொண்டர் சிறீதரன், மறவன்புலவு சச் சிதானந்தன் ஆகிய மூவரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் சென்றோம். நிலைய பொறுப்பாளரை பாராட்டி னோம்.

400 ஆண்டுகளுக்கு முன்பு வரை மாட்டிறைச்சிக்கு தடை இருந்த மண் ணில், மேலாதிக்க ஆளுநர் இறைச்சிக் காக மாட்டைக் கேட்கிறார் என்பதற் காகவே இந்தியாவுக்கு தப்பியோடிய ஞானப்பிரகாசர் போன்ற சைவப் பெரு மக்கள் வாழ்ந்த சிவபூமியில், இந்துக் கள் மீது வெறுப்பை கக்குவதற்காக, இந்துக்களைத் தூண்டுவதற்காக, இன முரண்பாட்டை வளர்ப்பதற்காக, இன மோதலை ஊதுவதற்காக, முகமதியர் இவ்வாறு திட்டமிட்டே மாடுகளை இறைச்சிக்காகக் களவெடுக்கின்றனர் என்று பொலிஸ் நிலைய பொறுப்பாளரி டம் தெரிவித்தோம் - என்றுள்ளது. (ஐ)

## சிலாவத்துறை பிரதேச மருத்துவமனை தரமுயர்வு

மன்னார், ஜூன் 14

மன்னார் சிலாவத்துறை பிரதேச மருத்துவமனை "பி" (உ) தரம் கொண்ட பிரதேச மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும், பாராளுமன்ற உறுப்பின ருமான ரவூப் ஹக்கீம் சிலாவத்துறை பிரதேச மருத்துவமனையை சகல வசதிகளுட னான ஆதார மருத்துவ மனையாக அல் லது மாவட்ட மருத்துவ மனையாக தரம் உயர்த்துமாறு பிரே ரித்திருந்தார்.

இதன்படி, சிலாவத்துறை மருத்துவ மனை தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தர உயர்வின் படி இல 01-18/2020 சுற்றறிக் கையின் பிரகாரம் அந்த மருத்துவ மனைக்கு மேலதிக வசதி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இதற்கமைய, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தரமான வெளி நோயாளர் பகுதி, விடுதி வசதிகள், சிறு சத்திர சிகிச்சை பிரிவு ,பிரசவ அறை, புனர்வாழ்வு பிரிவு, நோயாளர் தொடர் சிகிச்சை பிரிவு, அடிப்படை ஆய்வுகூட வசதிகள், கதிரியக்க வசதிகள், ஈ சி ஜி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கான் வசதிகள், வருகை தரும் மருத்துவ நிபுணர்களின் சேவை, தரமான மருந்தகம், நவீன வசதி கள் உடன் கூடிய அம்புலன்ஸ் போன்ற பல்வேறு வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-06)

## பாதுகாப்பற்ற தொழிலாளர் இடம்பெயர்வை தடுக்கும் சர்வதேச மன்றத்தின் இலங்கை உச்சி மாநாடு ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 14

பாதுகாப்பற்ற தொழிலாளர் இடம் பெயர்விற்கான சர்வதேச மன்றத்தின் இலங்கை உச்சி மாநாடு நேற்று காலை இரத்மலானை ஸ்டைன் கலையகத்தில் ஆரம்பமானது.

ஆசிய - பசுபிக் வலய அமைச்சு மட்ட பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரபல வர்த்தக நிறுவனங்களின் தலை வர்கள் உள்ளிட்ட பலர் இந்த மாநாட் டில் பங்கேற்றனர்.

ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத குடியேற்றம் உள்ளிட்ட நவீன அடி மைத்தனத்திற்கு எதிராக ஆசிய பசுபிக் வலயத்தில் முன்னணியாக செயற்படும் அமைப்பே பாலி மாநாடாகும்.

நேற்று காலை ஆரம்பமான அங்கு ரார்ப்பண நிகழ்வில் வலய நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் தலைவர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், சர்வ தேச இராஜதந்திரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## சென். பற்றிக்ஸில் பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் "அப்ஸ்பா" (APSPA) சர்வதேச சிம்போசியம் மற்றும் பாடசாலை உள வியல் திறன்கள் பற்றிய பயிற்சி பட்டறை நிகழ்வு கள் இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் தந்தை ஜெ. பணி பத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

## தேசிய மக்கள் சக்தியினர் யாழில் துண்டுப்பிரசுரம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

தேசிய மக்கள் சக்தியினரால் யாழ்ப்பாண நகரில் நேற்று வியாழக்கிழமை துண்டு பிரசுரங்களை வழங்கி னர்.

இதில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அருண் ஹேமச் சந்திர கருத்து தெரிவிக்கையில்,

உணர்வு சார்ந்த அரசியலை முன்னெடுத்து, அரசியல் இருப்புகளை தக்கவைப்பது அரசியல்வாதி களுக்கு இலகுவான ஒன்று. இம்முறை உணர்வு சார்ந்த அரசியல்களை தவிர்த்து அறிவு சார்ந்த அரசியலை செயல்படுத்துவது தமிழர் - சிங்களவராகிய இரண்டு இனங்களுக்கும் தேவையான ஒன்று - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.06.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 32

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பேரம் பேசும் அரசியல் திறன்

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்திருக்கும் நிலையில் பிரதான வேட்பாளர்கள் வடக்கை வலம் வருகின்றனர். அரசியல் கட்சிகளின் பணிமனைகளுக்கு மட்டுமல்ல - மாறாக, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்களின் வீடுகளுக்கும் சென்று தங்களுக்கான ஆதரவை கோருகின்றனர். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில்தான் அனைவரும் வடக்கு தலைவர்களின் படலைகளை தட்டுகின்றனர். ஆனால், அவர்கள் கிழக்குக்கு பிரத்தியேக பயணத்தை மேற்கொள்ளவில்லை.

அவர்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் பிரச்னை என்பது வடக்கு தமிழ் மக்களின் பிரச்னை மட்டும்தான். தமிழ் மக்களின் பிரச்னையை வடக்குக்கான பிரச்னையாக குறுக்குவதில் அவர்கள் கணிசமான வெற்றியை பெற்றுவிட்டனர். மேற்குலக இராஜதந்திர தரப்புகளின் அணுகுமுறையும் ஏறக்குறைய அவ்வாறுதான் இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையில் இம்முறை தேர்தல் மிகவும் சவாலானது - மிகவும் நெருக்கடியானது. ஏனெனில், தற்போதுள்ள நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாது விட்டால் எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது வீதமான வாக்குகளை பெறமுடியாது போகலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான பங்கைக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில்தான் அனைவரும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் வீடு தேடிச் செல்கின்றனர்.

ஆனால், இந்த விடயத்தை உச்சபட்சமாக கையாள வேண்டிய தமிழ்த் தலைவர்கள் என்போர்களோ வழமைபோல் நித்திரை கொள்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிக்காமல் விடமாட்டேன் என்பதில் ஒற்றைக்காலில் நிற்கின்றார். ஏன் இந்தளவு ஆக்ரோஷமாக இருக்கின்றார்? அவருக்கு ஏதேனும் இரகசிய நிகழ்ச்சிநிரல் உண்டா? இதன் காரணமாகத்தான் அவர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பதில் இந்தளவு உறுதியாக இருக்கின்றாரா?

உண்மையில், தமிழ் அரசியல்வாதிகள் - முக்கியமாக, சுமந்திரன் போன்றவர்கள் புத்திசாலித்தனமான அரசியல்வாதிகள் என்றால் ஒருபோதுமே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்திருக்க மாட்டார்கள். அதற்கு மாறாக, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதன் ஊடாக தென்னிலங்கையை இறங்கிவரச் செய்யும் உத்தி தொடர்பில் சிந்தித்திருப்பார்கள்.

தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதற்கு மாறாக அனைவரும் ஓரணியாக நின்றிருந்தால் தென்னிலங்கையின் வேட்பாளர்கள் நிச்சயமாக கீழிறங்கியிருப்பர். தாங்கள் நிச்சயம் தோல்வியடைந்து விடுவோம் என்னும் நிலைமை ஒன்றுதான் அவர்களை இறங்கி வரச் செய்யும். ஆனால், அவர்கள் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை பார்த்து, அச்சப்பட முடியாதளவுக்கு சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் தென்னிலங்கைக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருக்கின்றனர். அதாவது, நீங்கள் அச்சப்பட வேண்டாம் - நாங்கள் தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என்று அவர்களுக்கு வாக்குறுதி வழங்கப்படுகின்றது. நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களை எவ்வாறு நோக்குவார்கள்?

இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும்கூட அரசியலில் பேரம் பேசுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளத் தெரியாது போனால் நமது அரசியல்வாதிகள் தொடர்பில் என்ன கூறுவது?

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழா, 17ஆவது பன்னாட்டு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், உலகத் தமிழ் பண்பாட்டு மையம் இணைந்து நடத்தும் பொன்விழா மற்றும் 17ஆவது பன்னாட்டு மாநாடு யாழ்ப்பாணம் - திவ்யமஹால் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்துதலுடன் ஆரம்பமாகும். இந்த நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிகழ்வு இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தலைமையில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மதத் தலைவர்களின் ஆசி உரைகளைத் தொடர்ந்து வரவேற்புரையை உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் துணைத் தலைவர் டாக்டர் பகீரதன் அமிர்தலிங்கம், மாநாட்டின் நோக்கவுரையை பேராசிரியர் பாஞ். இராமலிங்கம், தலைமை உரையை அமுது இளஞ்செழியன் ஆகியோர் ஆற்றுவர்.

சிறப்பு விழா மற்றும் பொன்விழா கொண்டாட்ட நிகழ்வை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா தொடக்கி வைப்பார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரையை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், மாநாட்டு மலர் வெளியீட்டுரையை வேலூர் வி. ஐ. டி. பல்கலைக்கழக நிறுவுநர் - வேந்தர் முனைவர் ஜி. விசுவநாதன், சிறப்புரையை அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரா. வேல்ராஜ் ஆகியோர் ஆற்றுவர்.

தொடர்ந்து, விருதுகள் வழங்கல் மற்றும் சிறப்புரையை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி நூல்கள் வெளியீட்டு சிறப்புரையை வி. ஜி. பி. உலகத் தமிழ்ச் சங்கம் டாக்டர் வி. ஜி. சந்தோசம் ஆகியோர் ஆற்றுவர். நிறைவில் பொன்விழா உரை, கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். (ஐ)

## திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 14

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 09 தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் , பிரசங்க பூஷணம் செ. த. குமரன் " மாணிக்கவாசகரும் திருபொற்சுண்ணமும்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)



பண்டத்தரிப்பு - காலையடி தெற்கு மறுமலர்ச்சி மன்றத்தில் சிறுவர் விளையாட்டுத் திடல் திறப்பு விழா கடந்த 9ஆம் திகதி நடைபெற்றபோது...!

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 14

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையு ரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் வழங்குவார்.

தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச. நவநீதன் "உள்ளம் பெருங் கோவில்" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 14 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 32
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அஷ்டமி




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர் களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினரு டன் நிறைவேற்றுவீர்கள். புதுமைபடைக்கும் நாள்.

**இடபம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்ப்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்து பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும். குதூகலமான சூழ்நிலை உருவாகும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் புதுமுதலீடுகளை தவிர்க்கவும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்

**துலாம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பிள்ளைகள் பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப்பேசுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை புரிந்து கொள்ள மாட்டார்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்பை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் வரவு உயரும். பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

# தி. மு. கவுக்கு எதற்காக வாக்களிக்க வேண்டும்?

## மாணவர்களுக்கு அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜுன் 14

கல்லூரி மாணவர்கள் ஏன் தி. மு. கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கமளித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி. மு. க. சார்பில் 'காலம் உள்ளவரை கலைஞர்' நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி ஆயிரம் கல்லூரி மாணவ - மாணவியருக்கு கல்வி உதவித்



தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், தி. மு. க. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு குறிப்பாக, மாணவர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்குவதை வாடிக்கையாக வைத்திருக்கிறது.

உங்களை தி. மு. க. கட்சியில் இணையச் சொல்லவில்லை. அதேசமயம் நீங்கள் எல்லோரும் தி. மு. கவுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களிடம் கைத் தொலைபேசி உள்ளது. அதில் கூகுளுக்குள் சென்று தி. மு. க. அரசின் சாதனைகளைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்- என்றார். (எ)

# தமிழக விவசாயிகளை அடகு வைத்த ஸ்டாலின்

## அண்ணாமலை சாடல்

சென்னை, ஜுன் 14

காவிரி நீரில் தமிழகத்தின் பங்கைப் பெற்றுத் தர வேண்டும் என்று தமிழக முதலமைச்சரிடம் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தமிழக விவசாயிகளின் நலனை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மொத்தமாக அடகு வைத்திருக்கிறார் என்றும் அண்ணாமலை சாடியுள்ளார்.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

காவிரி நீரில், கடந்த ஆண்டு கிடைக்கப் பெற்ற தண்ணீரின் அளவு 81. 4 டி. எம். சி மட்டுமே. ஆண்டுக்கு 177. 25 டி. எம். சி. தண்ணீர் பெற்றிருக்க வேண்டிய தமிழகம், அதில் பாதி அளவைக் கூட பெறவில்லை என்பது தி. மு. க. அரசின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது. தி. மு. க. , காங்கிரஸ் சந்தர்ப்பவாத இந்தியா கூட்டணியின் நலனுக்காக, தமிழக விவசாயிகளின் நலனை மொத்தமாக அடகு வைத்திருக்கிறார் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்.

காவிரியில் குறித்த அளவு நீர்வரத்து இல்லாததால், இந்த ஆண்டு ஜுன் 12 அன்று, விவசாயத்துக்காகத் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை திறக்கப்படாமல், பாசனத்துக்கு நீர் இன்றி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், முதலமைச்சர் ஸ்டாலினுக்கு இது குறித்த எந்தக் கவலையும் இல்லை. தன்னை ஒரு டெல்டாக்காரன் என்று கூறிவிட்டு, வயலில் கொங்கிரீட் வீதி அமைத்து நடக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு விவசாயிகள் வேதனை எப்படிப் புரியும்? என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தி. மு. க. தனது கொள்கைகளை எப்போதும் விட்டு கொடுக்காது

## கனிமொழி உறுதி

சென்னை, ஜுன் 14

தி. மு. க. தனது கொள்கைகளை எந்த காலத்திலும் விட்டுக் கொடுக்காது என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி தெரிவித்தார்.

அண்ணா அறிவாலயத்தில், முதல்வர் மு. க. ஸ்டாலினை புதிதாக நியமிக்கப்பட்ட தி. மு. க. பாராளுமன்ற குழுவினர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதையடுத்து, பாராளுமன்ற குழு தலைவர் கனிமொழி செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

என்னை இந்த பொறுப்புக்கு தெரிவு செய்ததற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 10 ஆண்டு காலமாக பா. ஜ. கவுடைய எத்தனையோ சட்ட வரைவுகளை நாங்கள் எதிர்த்திருக்கிறோம். சிறுபான்மை மக்களை, இந்த நாட்டை, இந்த நாட்டின் அரசமைப்பு சட்டத்தை, சமூக நீதியை காக்கக்கூடிய வகையிலேயே தி. மு. கவின் செயல்பாடுகள் தொடர்ந்து இருக்கும்- என்றார் கனிமொழி. (எ)

# மூன்றாம் பாலினத்தவர்கள் சிறப்பு பிரிவினர்

சென்னை, ஜுன் 14

கல்வி, வேலைவாய்ப்பில் மூன்றாம் பாலினத்தவர்களை சிறப்புப் பிரிவினராக கருத வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# காமராஜரின் ஆட்சி பற்றி பேசுவது தார்மீக உரிமை

சென்னை, ஜுன் 14

தி. மு. கவை காங்கிரஸ் ஆதரிக்கிறது. அதற்காக, காங்கிரஸ் கட்சியை வலிமைப்படுத்தக் கூடாது; பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி பற்றிப் பேசக்கூடாது என்று கூறினால், அது தவறு. பெருந்தலைவர் காமராஜரின் [illegible] என்னுடைய தார்மீக உரிமை என்று சென்னையில் நடந்த தமிழக காங்கிரஸ் பொதுக்குழுக் கூட்டத்தில், அந்தக் கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

துணிந்து நின்றால்தான், நாம் அடுத்த தலைமுறைக்கு வழி காட்ட முடியும். அனைவரும் தலைவர் ராகுல் காந்தி பிரதமராகவில்லை என்ற கவலையுடன் இருக்கிறோம்- என்றார். (எ)

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பா. ம. க. போட்டி

சென்னை, ஜுன் 14

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ள பா. ம. க, கூட்டணியிலுள்ள பா. ஜ. கவுடன் பேச்சுகளை நடத்தி வருகிறது.

இதேவேளை, தி. மு. க. விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா விக்கிரவாண்டி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் நடைபெறுமா என்று அச்சநிலை நாட்டில்!

## நிச்சயமற்ற நிலையில் ஆளும் தரப்பு என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 14

**ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி, அல்லது பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றபோதும் தேர்தல்கள் நடைபெறுமா என்ற அச்சம் எமக்கு வெகுவாக ஏற்பட்டுள்ளது என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன் தினம் புதன்கிழமை இலங்கை புலனாய்வு ஊடகவியல் நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நேர்மையான தேர்தலை ஊக்குவித்தல்: அரசியல் கட்சிகளின் வகிபாகம்' எனும் தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்களும், ஒட்டுமொத்தமான முழு நாடும் தேசிய தேர்தல்களை எதிர்பார்த்திருக்கின்றது. பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, அல்லது ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி நாம் அதற்கு முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தேர்தல்களை நடத்துமா என்ற அச்சம் எமக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவ்விதமான பின்னணியிலேயே எமக்கு சந்தேகம் ஏற்படுகின்றது.

அதேநேரம், அரசாங்கத்துக்கு தாம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது தோல்வி அடைந்துவிடுவோம் என்ற அச்சம் தீவிரமாக ஏற்பட்டுள்ளது. அதன் காரணத்தினாலேயே ஏதோவொரு வகையில் தேர்தல்களை தாமதப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது என்பது வெளிப்படையான விடயமாகும். அரசாங்கம் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது.

இதேவேளை, நாம் தற்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் உள்ளோம். நாம் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றோம். அவருடைய வெற்றிக்கா உழைத்து வருகின்றோம். எதிர்வரும் காலங்களில் எமது கட்சி தீர்மானத்தினை மாற்றினால் மாத்திரமே அதுபற்றி கரிசனை கொள்ள வேண்டும்.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என்று அரசாங்கத்தின் பிரதானிகள் கூறினாலும் எனக்குக் கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் தேர்தல்களை தாமதப்படுத்துவதற்கு பல்வேறுவிதமான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன-என்றார்.

(அ)

# கிளிநொச்சியில் குளவி கொட்டிய மாணவர்கள் வைத்தியசாலையில்!

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 20 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதிக காற்று வீசி வரும் நிலையில், குழவிக் கூட்டிலிருந்த குழவிகள் கலைந்து வந்து இவ்வாறு மாணவர்களை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குழவிக் கொட்டுக்கிலக்கான மாணவர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# திரையரங்கு மீது துப்பாக்கி சூடு; தமிழருக்கு எதிராக குற்றச்சாட்டு

ஒட்டாவா, ஜூன் 14

கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இலங்கை தமிழர் ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் கடந்த ஜனவரி 24ஆம் திகதி ரொறன்ரோவில் உள்ள வெவ்வேறு திரையரங்குகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி மார்கம் நகரைச் சேர்ந்த 27 வயதான ஆண்ட்ரூ டக்ளஸ் என்பவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, மே 22ஆம் திகதி இலங்கைத் தமிழர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர் பிரம்டன் நகரை சேர்ந்த 43 வயதான நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் சந்தேக நபர்களை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# முதியோர்கள் எண்ணிக்கை நாட்டில் வேகமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் முதியோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நாட்டில் பிறக்கும்போதே ஆயுட்காலம் 79 வயதுக்கு மேல் உள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நம் நாட்டில் பிறக்கும் போது சராசரி ஆயுட்காலம் 79.7 வீதம் ஆகும். புதிய மதிப்பீட்டின்படி பெண்களுக்கு 83 வயதாக அதிகரித்துள்ளது. இதனால், முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது நமக்குள்ள இன்னொரு பிரச்னையாகும்.

எனவே, அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும் சீர்திருத்தத்தை மேற்கொண்டு வருகிறோம்.

அனைத்து மாகாண சபை வைத்தியசாலைகளையும் உட்படுத்தி இதற்காக சுமார் 70 பில்லியன் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நோய் கட்டுப்பாடு பலப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ப, தொற்றுநோயியல் பிரிவு மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கிறோம். புதிய திட்டத்தின் கீழ் அதைச் செய்து வருகிறோம் -என்றார்.

(அ)

# 4 வயதுச் சிறுமி தாக்கப்பட்ட காணொலியை சமூக ஊடகத்தில் பதிந்தவருக்கு ரூ.5 இலட்சம்

கொழும்பு, ஜூன் 14

4 வயது சிறுமி தாக்கப்படும் காணொளியை சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகக் கூறப்படும் இளைஞருக்குப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் 5 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்பட்டது.

இந்த சன்மானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் புதன் கிழமை இடம்பெற்றது.

அண்மையில் வெலிஓயா பிரதேசத்தில் 4 வயது சிறுமி தாக்கப்பட்ட காணொளியொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமியைத் தாக்கியதாகக் கூறப்படும் குகுல் சமிந்த என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.



தாக்குதலுக்குள்ளான சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்கப்போவதில்லை!

## கூறுகிறார் ஷாந்த பண்டார

கொழும்பு, ஜூன் 14

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்" என இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது தொடர்பாக மக்கள் இருமுறை சிந்திப்பார்கள். கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியினரின் செயற்பாடுகளை மக்கள் மறக்கவில்லை.

கடந்த காலங்களில் மக்கள் எதிர்நோக்கியிருந்த நெருக்கடி



களை சாதகமாக பயன்படுத்தியே வாக்கு எண்ணிக்கையை பெறுவதற்கு தேசிய மக்கள் சக்தியினர் முயற்சிக்கின்றனர். ஆனால் இன்றைய நிலைமை மாறியுள்ளது. ஜனாதிபதி ரணில் ரவிக்ரமசிங்க நாட்டு மக்கள் சுமூகமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

இன்று நாட்டில் அத்தியாவசிய பொருட்கள் எரிவாயு எரிபொருள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு இல்லை. மக்களின் வாழ்க்கை சுமையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடந்தும் முயற்சித்து வருகின்றார்.

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரதன்மை அடைந்துள்ளது. நாட்டுக்குள் சுமூகமான சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான ஒரு சூழலில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டிற்கு பொருத்தமான தலைவர் ஒருவரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். சந்தர்ப்பவாதி அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரணில், சஜித் ஆட்சிக்கு வந்தால் '13' முழுமையாக அமுலாக்கம்!

## விமல் அணி போர்க்கொடி



கொழும்பு, ஜூன் 14

**தமிழர்களின் தீர்மானமிக்க வாக்குகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவார். 13 ஆவது திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதியும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே தேசியம் தொடர்பாக பெரும்பான்மையினத்தவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.**

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் குறிப்பிடாத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வடக்கு மாகாணத்துக்குச் சென்று தமிழ் மக்களிடம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை தான் முழுமையாக அமுல்படுத்துவேன் என்று பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலான மக்கள் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக இருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் இது போன்று கருத்துரைக்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டே எதிர்க்கட்சித் தலைவர் 13 ஆவது திருத்தம் பற்றி பேசியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்வைத்த 22 ஆவது திருத்த தனியார் பிரேரணையில் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் வலியுறுத்தலுக்கமைய 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்தும் வகையில் இரண்டு சட்டத்திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ,1987 ஆம் ஆண்டு இந்து - லங்கா ஒப்பந்தத்துக்கு இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். இருப்பினும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக அவர் ஒரு போதும் குறிப்பிடவில்லை. ஜனாதிபதியாக பதவி வகித்துக் கொண்டு அவர் அவ்வாறு செயற்படவுமில்லை. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக கூற்றுக்களை வெளியிட முன்னர் 13 ஆவது திருத்தத்தின் வரலாற்றை எதிர்க்கட்சித் தலைவர் அறிந்துக் கொள்ள வேண்டும். அப்போது அதன் பாரதூரம் மற்றும் திருத்தங்களின் உண்மை நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும்.


இந்து-அமெரிக்க நோக்கத்துக்காக பிரிவினைவாத முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன.13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.இந்தியாவின் தற்போதைய அரசியல் மாற்றம் இதற்கு முன்முனைப்புடன் செயற்படுகிறது.

இந்து-லங்கா ஒப்பந்தம் மற்றும் 13 ஆவது திருத்தம் ஆகியவற்றுக்கு எதிராக நிலவிய கடுமையான எதிர்ப்பினால் அவற்றை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்ற முடியாத சூழல் காணப்பட்டது. 13 ஆவது திருத்தம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நீதியரசர்கள் 13 ஆவது திருத்தம் தேசியத்தின் தலைமீது கட்டப்பட்டுள்ள கூர்மையான வாள்"என்று குறிப்பிட்டனர். திருத்தங்கள் ஊடாக வாள் கட்டப்பட்டுள்ளன. அவற்றை அவிழ்ப்பது பாரியதொரு குற்றமாகும்.

தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் வெளிநாடுகளின் அழுத்தம் ஆகிய காரணிகளால் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மாத்திரம் நீக்குவது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது.13 ஆவது திருத்தம் இல்லாமல் நாட்டுக்கு பொருந்தும் வகையில் பிரிவினைவாத அம்சங்கள் இல்லாத வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். சிறுபான்மை இனத்தவர்களின் தீர்மானமிக்க வாக்குகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தால் புதிய அரசியலமைப்புக்கு பதிலாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிப்பார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் உள்ளார்கள். இவ்விருவரில் எவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பார்கள். ஆகவே இவ்விருவரின் செயற்பாடுகள் குறித்து பெரும்பான்மையின மக்கள் கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.

(அ)



# தெற்கு அதிவேக வீதியில் பவுசர் பாதுகாப்பு வேலியில் மோதியது

கொழும்பு, ஜூன் 14

தெற்கு அதிவேக வீதியில் 61 ஆம் மைல்கல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை எரிபொருள் பவுசர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மத்தள பகுதியில் இருந்து கொட்டாவை நோக்கி பயணித்த எரிபொருள் பவுசர் ஒன்று வீதியின் நடுவில் இருந்த பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒருவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# மின்னியல் நூலகம் வடமராட்சியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமராட்சி பருத்தித்துறை நகர சபையால் மின்னியல் நூலகம் ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ணவினால் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி தாரணி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு சிறுவர் மின்னியல் நூலகம், உட்பட மூன்று மின்னியல் நூலக தொகுதிகளும் நிகழ்வின் பிரதம விருந்தினர் தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ண, முன்னாள் பருத்தித்துறை நகர சபை தவிசாளர்கள், அதிகாரிகளுடன் இணைந்து திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ண, தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை பணிப்பாளர் சுனில், தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை அதிகாரிகள், யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.சிறிவரன், மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள், பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர்களான இரு தயராசா, வே நவரட்ணம், பருத்தித்துறை நகரசபை உத்தியோகஸ்தர்கள், மின்னியல் நூலகத்தில் பயிற்சி பெற்ற அயல் பாடசாலைகளின் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

கொழும்பு, ஜூன் 14

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிக்கு எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படும் என தேசிய விவசாய சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த பருவத்தில் கீரி சம்பா, சம்பா பயிரிட்டுள்ள விவசாயிகள் மூலம் தரமான அரிசியை பெறுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென சங்கத்தின் தலைவர் அனுராதா தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அரிசி தட்டுப்பாடு காரணமாக ஒரு கிலோ கீரி சம்பா அரிசியின் விலை 320 ரூபாவைத் தாண்டியுள்ளதுடன், இதற்கு மேலதிகமாக சம்பா அரிசிக்கான தட்டுப்பாடும் தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்துள்ளது.

நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை பயன்படுத்தி அரிசி உற்பத்தி செய்ய இயலாது என்றும், அதற்கு சில வழிமுறைகளை கையாண்டு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் அனுராதா தென்னக்கோன் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் கீரி சம்பா, சம்பா அரிசியை உணவகங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்களில் அதிகளவில் பயன்படுத்தி வந்த நிலையில் தற்போது சாமானியர்களும் இந்த அரிசி வகைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு நாட்டில் பெரும் கிராக்கி நிலவுகிறது.

தற்போதுள்ள தேவையை பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டம் நாட்டில் தயாரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சில அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே அரசால் சேவை நீடிப்பு

## அது பாரம்பரியமாக தொடராது



கொழும்பு, ஜூன் 14

சில அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அது பாரம்பரியமாக தொடரும் நிலை அல்ல. எனவே சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்பு படைத் தளபதிகளின் சேவை கால நீடிப்பு தொடர்பில் தவறான புரிதல்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஆகியோரின் சேவை நீடிப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்குபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசியலமைப்பிற்கமைய ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கவேண்டும். தேர்தலுக்காக வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் அவசரமாக புதிய அதிகாரிகளை நியமித்து, இதுவரை மேற்கொண்ட கடமைகளை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியாது. சில அத்தியாவசிய சேவைகளில் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதைத் தடுக்க விசேட நிபந்தனைகளின் கீழ் சேவை நீட்டிப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் அமுல்படுத்தல் வட்டமேசை மாநாட்டைக் கூட்டுக!

## முன்னாள் சபாநாயகர் கரு கோரிக்கை



கொழும்பு, ஜூன் 14

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது குறித்து அரசியல் தலைவர்களும், புலம்பெயர் தமிழர்களும் நேர்மறையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி தீர்வை எட்டுமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

வடக்கு மற்றும் தெற்கின் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவும், இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் கண்ணியத்துடன் வாழக்கூடிய உரிமையை வழங்குவதும், இந்தப் பிரச்சினைகளை எதிர்கால தலைமுறைகளுக்கு விட்டு வைக்காமல் இருப்பதும் எமக்குள்ள பாரிய கடமையாகும்.

ஆகையால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான தலையீடுகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மேற்கொள்ள வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் 9 ஆவது நாடாளுமன்றத்தின் கால எல்லை தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் கட்சிக்கும், ஒட்டுமொத்த எதிர்க்கட்சிக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பில் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாக கருத்து தெரிவித்துள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போது நாடாளுமன்றத்தில் சுயேட்சையாக செயற்பட்டு வரும் அதிக அளவிலான உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட எண்ணி இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருப்பது எமக்குத் தெரியும்.

இது போன்ற முற்போக்கான அபிலாஷைகளைப் பாராட்டப்பட வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி இவ்விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம்.

தமிழ் புலம்பெயர்ந்த தரப்பினரில் குறிப்பிடத்தக்க குழுவினர் இதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இவ்விடயத்துக்கு நாட்டின் முதன்மை தரப்புகள் ஆதரவு தெரிவித்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்தப் பேச்சுகளைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கான கடமை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போன்றே அனைத்து கட்சிகளுக்கும் உள்ளது. குறுகிய அரசியல் காரணங்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் துரோகிகள் என்று எதிர்காலச் சந்ததியினர் குற்றஞ்சாட்ட வழிவகுக்கும். ஆகையால் ஜனாதிபதி உள்ளிட்ட நாடாளுமன்றம் உன்னத நோக்கத்துடன் தலையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்." - என்றுள்ளது. (அ)

# கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக மீன்பிடித்த 16 பேர் படகுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் 8 படகுகளுடன் நேற்று முன் தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற்பகுதியில் சட்டவிரோத தொழில்களான அட்டை பிடித்தல், ஒளிப்பாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளதால் சிறு தொழிலாளிகள் தொடர் முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

கட்டைக்காட்டிலிருந்து 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஐம்பதுக்கும் அதிகமான படகுகளில் சென்று ஒளிபாய்ச்சி மீன்பிடித்து பல்லாயிரக்கணக்கான மீன்களோடு கரைக்கு வந்து கொண்டிருந்தவேளை நேற்று முன் தினம் புதன்கிழமை காலை 8 படகுகளுடன் குறித்த 16 பேரும் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்தொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட சிலரைக் கடற்படை கடலில் வைத்து விடுவித்துள்ளதாக நேரில் பார்த்த சிறு தொழிலாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்கள் துணிவாக நேற்றும் சட்டவிரோத மீன்பிடிக்குச் சென்றுள்ளதாகவும் அவர்கள் யாருடன் தொடர்பு வைத்து இலஞ்சம் கொடுத்து தொழில் புரிவதாகவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-2)

# சமுர்த்திக்கு புத்துயிர்!



கொழும்பு, ஜூன் 14

அரசியல் தலையீடுகளாலும் பல்வேறு கோரிக்கைகளாலும் பின்னடைவைச் சந்தித்த சமுர்த்தி இயக்கத்தை புத்துயிர் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அதன்படி சமுர்த்தி வங்கியின் தலைமையகம் மற்றும் சமூக வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய திட்டமானது "புதிய கிராமம் - புதிய நாடு" என்று பெயரிடப்பட்டுள்ளதுடன் சமுர்த்தி இயக்கத்தை புத்துயிர் பெறுவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சிறுவர்களை வேலைகளுக்கு அமர்த்துவோருக்கு எச்சரிக்கை

## 1929 இற்கு முறைப்பாடு செய்யலாம்

கொழும்பு, ஜூன் 14

சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது தொடர்பில் நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

எனினும், உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்த நாட்டில் குழந்தைகளை தொழிலாளர்களாக பயன்படுத்துவது மிகவும் குறைந்த அளவில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் சட்டத்தின் படி, 16 வயதுக்குட்பட்ட எவரையும் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகளை கூலி வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக கடந்த ஆண்டு 186 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இவ்வருடத்தின் முதல் 5 மாதங்களில் சிறுவர்களை கூலி வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் 56 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குழந்தை தொழிலாளர்கள் மற்றும் சிறுவர் உரிமை மீறல் குறித்து 24 மணி நேர தொலைபேசி எண்ணான 1929 இற்கு முறைப்பாடு செய்யலாம் என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் மேலும் கூறியுள்ளது.

# இலங்கை வருமாறு பா.ஜ.க தலைவர்களுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைப்பு

கொழும்பு, ஜூன் 14

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மற்றும் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் விஜயவாடாவில் சந்தித்து, இந்திய தேர்தல்களின் சமீபத்திய வெற்றி மற்றும் அவர்களின் மும்முறை தொடர்ச்சியாக ஆட்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்கு அவர்கள் தொடர்ந்து அளித்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கைக்கு விஜயம் செய்ய அழைப்பு விடுத்தார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண்டார்.



இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது ஆண்டு நினைவு முத்திரையையும் அவர்களுக்கு வழங்கி வைத்தார். (அ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 14

கரையோர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக ரயில் திணைக்களம் தெரிவித்தது.

பாணந்துறையில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயில் ஒன்று பாணந்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை தடம்புரண்டது. இதன்போது, ரயிலின் பெட்டி ஒன்று புரண்டு அருகிலிருந்த சமிக்ஞை கட்டமைப்பில் மோதியதால் அந்தக் கட்டமைப்பும் முற்றிலும் செயலிழந்துள்ளது.

இதனால், கரையோர ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

கரையோர ரயில் சேவை மொரட்டுவை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# 9,140 கஞ்சா செடிகளுடன் நபர் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, ஜூன் 14

மொனராகலை தணமல்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கஹகுருல்லன்பெலெஸ்ஸ பகுதியில் கஞ்சாச் செடிகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை தணமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 9,140 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறப்பு திகதியில் மீளவும் மாற்றம்?

## இந்துக்கள் மத்தியில் பெரும் குழப்பம்! பாதயாத்திரையை முடக்க முயற்சியா?

அம்பாறை, ஜூன் 14

**வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை திறக்கப்படும் திகதியில் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

இது இந்துக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு, சந்திதி - காதிர்காமம் பாதயாத்திரையை முடக்கும் முயற்சியா என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஜூலை 2 ஆம் திகதி திறக்கப்படும்.

என்று நேற்று முன்தினம் கதிர்காமத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது ஜூலை 2 ஆம் திகதி திறக்கப்பட்டு 14 ஆம் திகதி மூடப்படும் என்று மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இதனால் பாதயாத்திரை மேற்கொண்டுள்ள இந்துக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

நான்கு நாட்களில் காட்டைக் கடந்து கொடியேற்றத்துக்குச் செல்ல முடியாது. சாதாரணமாக ஆறு நாட்கள் தேவை. எனவே இந்த நாட்கு றைப்பு திட்டமிட்ட ஒரு சதியா கக்கூட இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அந்தக் காலத்தில் இப் புனித யாத்திரை பக்திபூர்வமாக கொடியேற்றத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்னரே திறக்கப்பட்டு எந்த அன்னதானமோ நீர் விநியோகமோ இல்லாது சிறப்பாக இடம்பெற்று வந்திருக்கிறது. சுமார் 20 நாட்கள் காட்டுப்பாதை திறந்திருக்கும்.

ஆனால், தற்போது செலவைப் பொறுத்து திறக்கப்படும் நாட்கள் தீர்மானிக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை நீடிக்கிறது. அதுவும் மொனராகலையில் ஒரு திகதி அம்பாறையில் ஒரு திகதி. இதற்காக லாகுகலை பிரதேச செயலகம் நிதி சேகரிக்கின்றது. நீர் வழங்கலுக்காக இன்னும் சில தொண்டு அமைப்புகளும் நிதி சேகரிக்கின்றன. என்ன நடக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாமல் உள்ளது.

"கூட நாட்கள் திறந்தால் செலவு அதிகம். நாங்கள் மூன்று நாட்களில் சென்றிருக்கிறோம்" என்று கதிர்காமக் கூட்டத்தில் ஓர் அதிகாரி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

மொத்தத்தில் இம்முறை இவ்வாறாக முரண்பாடு ஏற்பட்டுள்ளமை எதிர்காலத்தில் இப் பாதயாத்திரையை முடக்கும் செயல்பாடாக இருக்கலாமோ என இந்துக்கள் அச்சப்படுகின்றனர்.

ஏலவே, கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஜூலை முதலாம் திகதி திறக்கப்படும் என மொனராகலையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் லாகுகல பிரதேச செயலகத்தால் அது ஜூலை 2 ஆம் திகதி என உகந்தைக் கூட்டத்தில் கூறப்பட்டது. இப்போது மீண்டும் திகதி மாற்றப்பட்டுள்ளது.


உகந்தை மற்றும் கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் ஜூலை 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 22 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது. (எ)


# திடீர் பரிசோதனையின்போது சிக்கியவர்களுக்கு அபராதம்!

கல்முனை, ஜூன் 14

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனையின் பேரில், சம்மாந்துறை சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். ஐ. எம். கபீரின் வழிகாட்டலிலும் மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற பகுதிகளில் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இரண்டு ஹோட்டல்களில் தொழில் புரிபவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இன்மை கண்டறியப்பட்டது. இதனால் அந்த ஹோட்டல்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இதேவேளை காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்த நான்கு கடைகளுக்கு தலா 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்தோடு, மரக்கறிகளை அடிப்படை சுகாதாரம் இன்றி நிலத்தில் வைத்து விற்பனை செய்தமைக்காக 5000 ரூபாய் அபராதம் அறவிடப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டது. (எ)





# அகோர மாரியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு

சம்மாந்துறை, ஜூன் 13

அம்பாறை - சம்மாந்துறை, கோரக்கர் கிராம அகோர மாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வருடாந்த தீ மிதிப்பு திருவிழா உற்சவத்துக்காக ஆலய பூசகர் மு. ஜெகநாதன் தலைமையில் கடல் நீர் எடுத்து வந்து ஆலயக் கதவு திறக்கப்பட்டது. (எ)

# புகைத்தல், போதை எதிர்ப்பு விழிப்புணர்வு வீதி நாடகம்!

களுவாஞ்சிக்குடி, ஜூன் 14

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி மற்றும் வீதி நாடகம் என்பன சிறப்பாக நடைபெற்றன.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு என்பனவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை இடம்பெற்றது.

"நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டியெழுப்பு வோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் மகிழூர்முனை சக்தி வித்தியாலய முன்றலில் ஆரம்பமான பேரணியில் புகைத்தல் மற்றும் போதைப் பழக்கத்தால் ஏற்படும் பாதக விளைவுகளை குறிக்கும் பதாகைகளை ஏந்திக் கோஷங்களையெழுப்பிய வண்ணம் மகிழூர் பொது மைதானத்தை அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசனின் நெறியாள்கையில் "ஆடல் நிலம்" வழங்கிய "விரல் இடுக்கில் கசியும் உயிர்" எனும் தலைப்பிலான புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு வீதி நாடகமானது கலந்துகொண்டோர் அனைவரினதும் வரவேற்பை பெற்றது.

இந்தப் பேரணியில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த வீதி நாடகமானது பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றதுடன், இதில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)





# சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய 144ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வு

திருகோணமலை, ஜூன் 14

திருகோணமலை சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் 144 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வு பாடசாலை நிர்வாகம், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஆகி யவற்றின் ஒழுங்கமைப்பில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, கேக் வெட்டப்பட்டு ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு பகிரப்பட்டு அங்குரார்ப்பண நிகழ்வு வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.


144 வது வருட நிறைவு விழா இவ்வருடம் முழுவதும் கட்டம் கட்டமாக இடம்பெறவுள்ளது. கிரிக்கெட், நடைபவனி மரதன் ஓட்டம், விளையாட்டுப் போட்டிகள் என்பன எதிர்வரும் 15, 17, 22 ஆம் திகதிகளில் நடைபெற்று இறுதி நாள் கொண்டாட்ட விழா 25 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைத்தில் பயங்கர தீ விபத்து தமிழர்கள் உட்பட 49 பேர் பலி!

டுபாய், ஜூன் 14

**குவைத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி தமிழர்கள் உட்பட 49 பேர் பலியாகினர். இதில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.**



இந்த தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணிகள் நடந்து வருகின்றன. இவ்வாறு பலியானவர்களில் 42 பேர் இந்தியர்கள் எனக் கண்டறியப்பட்டதாக கடைசியாக கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. மீதமுள்ளவர்கள் பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், எகிப்து மற்றும் நேபாளத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

6 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் 200 பேர் தங்கியிருந்தனர். தொழிலாளர் முகாம் என அழைக்கப்படும் அந்தப் பகுதியில் தங்கியிருந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் ஆவர். அதிலும் கேரளா, தமிழ்நாடு போன்ற தென்னிந்தியாவை சேர்ந்தவர்களே அதிகம்.

இந்த அடுக்குமாடி குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

மளமளவென பரவிய இந்த தீ அடுத்தடுத்த வீடுகளுக்கும், மாடிகளுக்கும் பரவியது. இதனால் அந்த பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியது.

அதிகாலை நேரம் என்பதால் பலரும் தூக்கத்தில் இருந்தனர். இதனால் அவர்கள் தூக்கத்திலேயே உடல் கருகினர். அதேநேரம் புகை மூட்டம் காரணமாக பலருக்கும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டது.


இவ்வாறு உடல் கருகியும், மூச்சுத்திணறியும் பல தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் உடல் கருகியதை விட, மூச்சுத்திணறி இறந்தவர்களே அதிகம் ஆகும்.

அதேநேரம் தீ விபத்து ஏற்பட்டதும் தப்பிக்க வழி தெரியாமல் மாடிகளில் இருந்து பலரும் கீழே குதித்தனர். இதனால் படுகாயம் ஏற்பட்டும் சிலர் உயிரிழந்தனர்.

இதனால் அந்த பகுதி முழுவதும் மரண ஓலமும், அலறல் சத்தமுமாக பெரும் பரபரப்பாக காணப்பட்டது.

நெஞ்சை உருக்கும் இந்தப் பயங்கர சம்பவத்தில் 49 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

(எ)



# நதியில் படகு மூழ்கி 86 பேர் உயிரிழப்பு!

கின்ஷாசா, ஜூன் 14

கொங்கோவில் நதியில் படகு மூழ்கி 86 பேர் பலியாகினர்.

நீரில் தத்தளித்த 185 பேர் மீட்கப்பட்ட நிலையில், மேலும் சிலரைக் காணவில்லை என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான கொங்கோவின் மாய் - நிடோம்பே மாகாணத்தில், கொங்கோ நதியின் கிளை நதிகளில் ஒன்றான குவா நதி பாய்கிறது. இந்த நதியில் நேற்று முன்தினம் இரவு மிகப் பெரிய படகு ஒன்று கவிழ்ந்து மூழ்கியது.

முஷீ நகரிலிருந்து தலைநகர் கின்ஷாசா நோக்கி வந்த படகு, லெடிபா கிராமத்தின் அருகே விபத்துக்குள்ளானது. படகில் பயணித்த அனைவரும் நதியில் விழுந்து தத்தளித்தனர். நீச்சல் தெரிந்தவர்கள் கரையை நோக்கி நீந்தினர். மற்றவர்கள் நதியில் மூழ்கினர்.

இதற்கிடையே, விபத்து குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து சென்று நதியில் தத்தளித்தவர்களை மீட்டனர். இறந்தவர்களின் உடல்களும் மீட்கப்பட்டன. நேற்று காலை நிலவரப்படி 21 குழந்தைகள் உள்ளிட்ட 86 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)



# மொங்கோலியாவில் பனிப்புயலால் 70 இலட்சம் கால்நடைகள் இறந்தன

உலன்பாட்டர், ஜூன் 14

மொங்கோலியாவில் பனிப்புயல் தாக்கி 70 இலட்சம் கால்நடைகள் உயிரிழந்தன.

ரஷ்யாவுக்கும், சீனா மற்றும் தீபெத்துக்கு இடையில் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் மொங்கோலியா நாடு உள்ளது. இதனால் வருடத்துக்கு 10 மாதங்கள் மொங்கோலியாவில் மைனஸ் 30 டிகிரி செல்சியஸ் அளவில் குளிர்ந்த வானிலையே நிலவும். இந்த நிலையில் மொங்கோலியாவில் இயல்பை காட்டிலும் பயங்கரமான பனிப்புயல் வீசி வருகிறது.

இதனால் அங்குள்ள மாகாணங்களில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் என்பன பனிப்புயலுக்கு சேதமடைந்தன. இதனால் அங்கு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர். இந்த நிலையில் கடும் குளிர், உணவுத் தட்டுப்பாட்டால் மொங்கோலியாவில் 70 இலட்சம் கால்நடைகள் இறந்துவிட்டதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ)

# கட்டுக்கடங்காத காட்டுத் தீ

பாரிஸ், ஜூன் 14

தென்கிழக்கு பிரான்ஸின் வார் மாகாணத்தில் மௌரஸ் மவுசீப் என்ற வனப்பகுதி உள்ளது. இந்த மலை குன்றுகளுடன் கூடிய வனப்பகுதியில் நேற்று முன்தினம் திடீரென காட்டுத்தீ பரவியது.

தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களில் விரைந்து வந்தனர். பின்னர் வனப்பகுதியில் கட்டுக்கடங்காமல் பரவியுள்ள காட்டுத்தீயை அணைக்க கடுமையாக போராடி வருகினர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனப்பகுதியை சுற்றியிருந்த பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காட்டுத்தீ பரவல் காரணமாக அங்கு இதுவரை 600 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி தீக்கிரையாகி உள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ)

# இஸ்ரேலின் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி பலி

## இஸ்ரேல் - லெபனான் இடையே பதற்றம்

பெரூட், ஜூன் 14

லெபனான் மீது இஸ்ரேல் விமானப் படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா ஆயுதக் குழு தளபதி உயிரிழந்தார்.

பலஸ்தீனத்தின் காஸா முனையை நிர்வகித்துவரும் ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1, 139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணயக் கைதிகளாக காஸாமுனைக்கு ஹமாஸ் போராளிகள் கடத்திச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் போராளிகள் மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 100 இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது. மேலும், 120 பேர் இன்னும் பணயக் கைதிகளாக உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்தப் போரில் லெபனானில் செயல்பட்டுவரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா போராளிகள் அமைப்பு, ஹமாஸூக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. ஹமாஸூக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது அவ்வப்போது ஹிஸ்புல்லா போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹிஸ்புல்லாவின் தாக்குதலுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.



இந்த நிலையில், லெபனான் மீது இஸ்ரேல் விமானப் படை நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியது. தெற்கு லெபனானின் ஜொலியா என்ற கிராமத்திலுள்ள ஒரு வீட்டை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஹிஸ்புல்லா போராளிகளின் தளபதி அபுதலிப் உயிரிழந்தார். அவருடன் ஹிஸ்புல்லா போராளிகள் மூவர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா போராளிகள் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இதனால் இஸ்ரேலின் சில பகுதிகளில் தீ விபத்து சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன. மேலும், இஸ்ரேல் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம் என்று ஹிஸ்புல்லா எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால், இஸ்ரேல் - லெபனான் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் ஐந்தாண்டுகளுக்கு ரணில் ஆளவேண்டியது கட்டாய தேவை!

## கூறுகிறார் செஹான் சேமசிங்க



**கொழும்பு, ஜூன் 14**

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறவேண்டியது காலத்தின் கட்டாய தேவையெனவும், அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படக்கூடும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலாக பிரிதொரு வேட்பாளரை ஆதரிப்பதற்கு பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்தால் தங்களின் முடிவு எவ்வாறு அமையும் என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியினதோ அல்லது பொதுஜன பெரமுன கட்சியினதோ வேட்பாளராக வரமாட்டார். மக்கள் வேட்பாளராகவே களமிறங்குவார். கட்சி ரீதியாக பிளவுபட்டு தேர்தலை எதிர் கொள்ளும் நிலையில் இன்று நாடு இல்லை. பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடம் நாட்டை மீட்பதற்குரிய வேலைத்திட்டம் இல்லை. தேசிய மக்கள் சக்தியிடமும் இல்லை.

எனவே, ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டை அழிவு திசையை நோக்கி கொண்டு செல்லும் முடிவை பொதுஜன பெரமுன கட்சி எடுக்காது என நம்புகின்றேன். இந்நாட்டை மேலும் ஐந்தாண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆளவேண்டும்.

இந்த அரசில் உள்ள பங்காளிக்கட்சிகள் தமது அடையாளத்தையும்பாதுகாத்துக்கொண்டே செயற்படுகின்றன. ஜனாதிபதி அதற்கு ஒருபோதும் இடையூறு ஏற்படுத்தியது கிடையாது. எனவே, ரணில்தான் அடுத்த ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் உள்ள பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற முடிவிலேயே உள்ளனர்-என்றார். (அ)

# 14 வயதுடைய சிறுமியை கடத்தி சென்ற மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 14

புத்தல பகுதியில் 14 வயதுடைய சிறுமி ஒருவரை கடத்திச் சென்று பாதாள அறையொன்றில் மறைத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பில் 20 வயதுடைய இளைஞர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் கடந்த 9 ஆம் திகதி சிறுமியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அந்த சிறுமியை கடத்திச் சென்றுள்ளனர்.

பின்னர் தமது மகளை கடத்திச்சென்றுள்ளதாக அவரது தந்தை புத்தல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதன்படி முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் புத்தல பொலிஸார் சிறுமியை மீட்டுள்ளனர்.

அங்கிருந்து மீட்கப்பட்ட சிறுமி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# பதுளை வனப்பகுதியில் தீ!

கொழும்பு, ஜூன் 14

பதுளை ஹாலி எல வனப்பகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை ஹாலி எல வனப்பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிபத்தினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் திட்டமிட்ட முறையில் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# ஜோசப் அலோசியஸிற்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, ஜூன் 14

பேர்பச்சுவல் ட்ரஷரீஸ் குழுமத்தின் தலைவர் ஜெப்ரி ஜோசப் அலோசியஸிற்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை தற்காலிகமாக நீக்குமாறு மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி மத்திய வங்கி பிணைமுறி வழக்கில் 6ஆவது பிரதிவாதியான ஜோசப் அலோசியஸ் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜூலை முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 12 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு கொழும்பு விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இன்று அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த வெளிநாட்டு பயணத் தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு நீதிபதிகளான அமல் பெரேரா, நாமல் பெரேரா பலாலே மற்றும் ஆதித்ய பட்டபெண்டிகே ஆகியோர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் தொடர்ந்தும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையுடனான காலநிலையினைத் தொடர்ந்து டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 900ற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இதுவரை நாடளாவிய ரீதியில் 25,891 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கையும் 14 ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5,624 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவது அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகிய மாவட்டமாக யாழ்ப்பாணம் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி கம்பஹா மாவட்டத்தில் 2,487 பேரும், கண்டி மாவட்டத்தில் 1,986 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 1,441 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 1,372 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நிதி மோசடி வழக்கில் இருந்து ரஞ்சன் ராமநாயக்க விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 1

நிதி மோசடி தொடர்பில் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் கண்டியை சேர்ந்த பெண் ஒருவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றவியல் வழக்கின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் தவறு இருப்பதாக நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

முறைப்பாட்டாளரான பெண் வழங்கிய வாக்குமூலம் ஊடாக இதுவொரு குற்றவியல் வழக்கு இல்லையெனவும் குடியியல் வழக்கு என தெரியவருவதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதற்கமைய, ரஞ்சன் ராமநாயக்கவை இந்த வழக்கிலிருந்து விடுவித்து கண்டி நீதவான் சாமர விக்ரமநாயக்க உத்தரவிட்டார். (அ)

# குறைந்த பாலின இடைவெளியுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை!

கொழும்பு, ஜூன் 14

உலகளாவிய ரீதியில் குறைந்த பாலின இடைவெளியைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை தெற்காசிய பிராந்தியத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

வருடாந்த உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வரிசையில் பங்களாதேஷ் முதலாவது இடத்தையும் நேபாளம் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ள துடன் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் மிகக் குறைந்த பாலின இடைவெளியைக் கொண்ட நாடாக ஐஸ்லாந்து பதிவாகியுள்ளது.

இதில் பின்லாந்து இரண்டாவது இடத்திலும், நோர்வே மூன்றாவது இடத்திலும் இடத்திலும் உள்ளன. (அ)

# விடுதலையாகவிருந்த கைதி திடீரென மரணம்!

கொழும்பு, ஜூன் 14

பதுளை, தல்தென திறந்த வெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதி ஒருவர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் மரணித்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளிப் பகுதியை சேர்ந்த 50 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைதி ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் கடந்த மார்ச் முதலாம் திகதி தல்தென திறந்தவெளி சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டு எதிர்வரும்ஜூலை 11ஆம் திகதி விடுதலை பெற இருந்த நிலையிலேயே திடீர்சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் 12.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியாத போதிலும் சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனலைதீவு...

தத்தளித்த இவர்கள் தமிழ்நாட்டின் - நாகபட்டினம் மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர். தற்போது தமிழ்நாட்டில் உள்ள அவர்கள் இருவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவை மீனவர்களின் குடும்பத்தினர் சந்தித்தனர்.

இதன்போது அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி அவர்களை இலங்கை அழைத்துவர நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ஐ)

## வாள்களுடன்...

இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்றிருந்த சமயம் மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் சென்ற குழு கதவை உடைத்து நுழைந்து தையல் இயந்திரம், குளிர்சாதன பெட்டி, ஒலி பெருக்கி சாதனங்கள், தொலைக்காட்சி உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களை அடித்து நொறுக்கியது. அத்துடன், வீட்டிலிருந்த 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் பணம், 3 பவுண் சங்கிலி, 2 பவுண் காப்புகளையும் திருடிச் சென்றுள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் அயல் வீட்டிலிருந்த சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை பார்வையிட்டனர்.

அந்த சமயம் வாள்வெட்டு குழுவில் இருந்த ஒருவர் வீட்டாரிடம் மன்னிப்பு கேட்பதற்காக வந்திருந்தார். அப்போது, அவரை அங்கிருந்த பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நபரிடம் ஏனையவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## தமிழ் பொது...

அவர்களிடம் நாம் சில விடயங்களை அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறோம்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி இதுவரையும் எந்த விதமான முடிவையும் எடுக்கவில்லை. இப்போது அதன் தலைவர் என்ற ரீதியில் நான் அதை பொறுப்புடன் கூறுகிறேன்.

எங்களை சந்தித்த தெற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் நாம் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறோம். சமஷ்டி கட்டமைப்பு முறையில் ஓர் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வந்து ஒரு முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்கும் தீர்வு திட்டத்தை உங்களுடைய தேர்தல் அறிக்கைகளில் எந்தவித ஒளிவுமறைவு மின்றி வெளிப்படையாக - தெளிவாக முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். அந்த அதிகாரப் பகிர்வு முறை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு விளங்கப் படுத்தியிருக்கிறோம். அவர்கள் இது குறித்து எங்களுக்கு இதுவரை எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. ஆனால், இந்த விடயத்தில் நாங்கள் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்பதையும் அவர்களுக்குக் கூறியிருக்கிறோம்.

நாங்கள் குறிப்பிட்ட விடயங்களை உங்களின் அறிக்கைகளில் முதலில் முன்வையுங்கள் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, அவர்களின் அறிக்கைகள் வெளியாகிய பின்னர்தான் தமிழ் அரசு கட்சி ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் அதுவரை நாம் எந்தத் தீர்மா னத்தையும் மேற்கொள்ளப்போவதில்லை. எங்களுடைய மத்திய குழுவிலே முன்னரும் இதுபற்றி பேசியிருக்கிறோம். எதிர்வரும் 16ஆம் திகதி (நாளை மறுதினம்) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயவிருக்கிறோம். தேவை ஏற்பட்டால் பொதுச் சபையை கூட்டி ஆராய்வதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கிறோம் இதுதான் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு. (அ- ஐ)

## பல்கலை...

சமர்ப்பிக்கலாம்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி வரை தகுதியுடைய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## ஊடகவியலாளரின்...

மேற்கொண்டுள்ளது.

வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், மீன் தொட்டியை அடித்து உடைத்து வீட்டின் வரவேற்பறையில் வைக்கப்பட்டிருந்த பொருட்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் வெளியே நின்ற ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளுக்கும் , அவரது சகோதரனின் முச்சக்கரவண்டி மீதும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் அவற்றுக்கும் தீ வைத்துள்ளனர்.

அதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன சேதமடைந்துள்ளன.

“திருநங்கைகளின் உணர்வுகளை தவறாக சித்தரிக்காதே” என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை வீட்டினுள் வீசி விட்டு குறித்த கும்பல் தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## இந்து...

கொண்டதாகும். இரு கல்லூரிகளிடையேயும் இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி முதன்முறையாக நடைபெறவுள்ளது.

இந்தப் பெருந்துடுப்பாட்ட போட்டி குறித்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் சர்வேஸ்வரன் கருத்துரைக்கையில்,

“மானிப்பாய் இந்து கல்லூரியும் எமது சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் இணைந்து பெருந்துடுப்பாட்ட போட்டியை ஆரம்பிக்கிறோம். இந்து சகோதரர்களுக்கு இடையிலான சமர் என்ற பெயருடன் இந்தப் போட்டி நடைபெறும். இது ஒரு தொடர்ச்சியான விடயமாக இருக்க போகின்றது. இந்தப் போட்டி கிரிக்கெட் வளர்ச்சியில் முக்கியமான வளர்ச்சியாக அமையும் என நான் நம்புகிறேன்.”

இதேநேரம், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் இளங்கோ கருத்து வெளியிடுகையில்,

“இந்த துடுப்பாட்ட சமரை வெற்றிகரமாக இந்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம். இந்து சகோதரர்களின் சமர் என்று வர்ணிக்கப்படும் இந்தப் போட்டி இரண்டு நண்பர்களையும் இணைத்து நிற்கின்றது. எமது மாணவர்களின் கிரிக்கெட் திறனை வளர்க்க முகமாக இந்த சமரினை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். பெருந்துடுப்பாட்டத்தின் மூலம் மாணவர்களின் திறன் இன்னும் வளர்ச்சியடையும்.”

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணித் தலைவர் டினோஜன் கூறுகையில்,

“இந்தத் தொடருக்கு ஆதரவை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள். இந்த சமர் கிரிக்கெட்டில் சாதிக்க முனையும் வீரர்களுக்கு உற்சாகத்தை வழங்குவதாக அமையும். இந்த போட்டியின் மூலம் இதுவரை கிரிக்கெட்டில் நாட்டமில்லாது இருந்த பல திறமையான மாணவர்கள் கலந்து கொள்கின்றார்கள்.”

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணித் தலைவர் தெய்வீகன் பேசுகையில்,

“வடக்கின் பெரும் போர், இந்துக்களின் சமர், பொன் அணிகளின் போர் என நிறைய துடுப்பாட்ட சமர்களை பார்த்து வளர்ந்தவர்கள் நாம். முதல் தடவையாக எமக்கு இந்து சகோதரர்களின் சமர் என்ற பெருந்துடுப்பாட்ட போட்டியை ஏற்படுத்தி கொடுத்தமைக்கு இரண்டு பாடசாலை சமூகங்களுக்கும் நன்றி. யாழ்ப்பாணத்தில் முன்னணியில் உள்ள கிரிக்கெட்டில் அடுத்த கட்டத்துக்கு செல்ல இது வழி வகுக்கும்” - என்றார். (ஐ)

## ஜனாதிபதி ரணிலுடன்...

அவர் கூறியுள்ளார்.

நான்கு நாட்கள் பயணமாக வடக்குக்கு வந்த சஜித் பிரேமதாஸ தனது பயணத்தின் இறுதிநாளான நேற்று வியாழக்கிழமை செய்தியாளர் களை யாழ். ஊடக அமையத்தில் சந்தித்தார்.

அப்போது, நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் எமது மக்களுக்கானை தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றேன். பாடசாலைகளுக்கு, மருத்துவமனைகளுக்கு என உதவிகளை செய்வது தேர்தலுக்காக அல்ல. அது எனது நீண்ட நாள் திட்டம். இதற்கமையவே நீண்ட காலமாக அனைத்து இடங்களிலும் இதனை ஒரு பணியாக செய்து வருகின்றேன்.

நான் இங்கு வந்து மைதானத்தில் கதைத்த ஒரு விடயத்தை சிலர் சர்ச்சையாக்கியுள்ளனர். அதனை வைத்து எனக்கு எதிரான பிரசாரங்களை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக, நல்லாட்சி காலத்தில் மண்டை தீவில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்தன. அந்த நினைவில்தான் அந்த மைதானம் தொடர்பாக இளைஞர்களிடம் வினவினேன். ஆனால், அந்த இடம் மண்டைதீவு என் பது நினைவுக்கு வரவில்லை. மண்டை தீவில் கிரிக்கெட் மைதானம் அமைப் பது தொடர்பில் ஆராய்ந்து இருக்கின்றோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் கட்டமாக இந்த மைதானத்தை அமைப்போம்.

இப்போது நாட்டின் அரசியல் வேறு வியூகத்தில் செல்கின்றது. அதிலும் ஜனாதிபதி ரணிலின் செயல்பாடு ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தி நடக்கின்றதே ஒழிய சாதாரண மக்களுக்கானது அல்ல. ஜனாதிபதி ரணில் வடக்குக்கான பயணத்தின் போது பெருமளவிலான பெயர் பலகைகளை திறந்து வைத்துவருகின்றார். ஆனால், அவை என்றுமே பெயர்பலகையாக இருக்கப் போகின்றன. உதாரணமாக கிளிநொச்சி பூநகரியில் நகரமயமாக்கல் என 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது ஆறு மாதங்கள் அண்மித்துள்ள போதும் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சதமேனும் செலவு செய்யப்படவில்லை. உண்மையில் இதுவே யதார்த்தமாக உள்ளது. அவ்வகையில் ஜனாதிபதி சொல்லும் வடக்கின் அபிவிருத்தி என்னவென்பதை புத்தியுள்ள வடக்கு மக்கள் புரிந்து கொள்வார்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கனவே அறிவித்தது போன்று அமுல்படுத்துவதில் பின் வாங்கப்போவதில்லை - என்றார்.

இதன்போது செய்தியாளர்கள், ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற நிலைப்பாட்டில் கூட்டணி ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடக்கின்றமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

“இதனை முழுமையாக நான் மறுக்கிறேன். மீண்டும் மீண்டும் அதை தருகிறேன் இதைத் தருகிறேன் என்று கதைகள் சொல்லப்படும். ரணிலுடன் இணைந்து அரசியலை முன்னெடுக்கப் போவதில்லை. நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிய ராஜபக்ஷ தரப்புடன் இருப்பவர்களுடன் ஒருபோதும் இணையப்போவதில்லை” - என்றார். (ஐ)

## சிறாரின்...

நாளாந்தம் கிடைக்கும் வழக்குகள் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தீவிர கவலைகளை ஏற்படுத்துகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத அந்த பொலிஸ் அதிகாரி இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் நீதிமன்றங்கள் ஊடாக சட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படுகின்றன என்றும் கூறினார்.

மேலும், இவ்வாறு பதிவிடப்படும் காணொலி அல்லது படங்களை கண்டறியும் நவீன தொழில்நுட்பம் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளது. எனினும், எங்களிடம் ஒரு தரவுத் தளம் உள்ளது. உலகில் வேறு இடங்களில் இதுபோன்ற வழக்ககள் கண்டறியப்பட்டவுடன் தரவுத்தளம் புதுப்பிக்கப்படும். கைபேசிகளில் உள்ள வசதிகளை பயன்படுத்தி ஆபாச காணொலி மற்றும் படங்கள் பகிரப்பட்டதும் அவை எங்கிருந்து வந்தன என்பதை கண்டறியும் தொழில்நுட்பம் உள்ளது. அதற்கேற்ப எமது தரவு தளத்தில் தகவல்கள புதுப்பிக்கிறோம்.

அண்மையில் ஒருவர் தனது அயல் வீட்டில் வசிக்கும் சிறுமி தொடர்பான படத்தை இணையத்தில் வெளியிட்டார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். இந்த உள்ளடக்கம் அமெரிக்காவில் கண்டறியப்பட்டது. இந்த வழக்கு தற்போது சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது - என்றும் அந்த பொலிஸ் அதிகாரி கூறினார்.

இதனிடையே, பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான குற்றவியல் தண்டனை சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கைக்கு...

நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட 48 மாதங்களுக்கான கடன் வசதியின் இரண்டாவது மீளாய்வுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் கீழேயே இந்த நிதி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில்,

“கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக கடன் மறுசீரமைப்பை முன்னெடுத்து செல்வதற்கான இலங்கையின் முன்னேற்றத்தை ஐ. எம். எவ்வின் பணிப்பாளர்கள் வரவேற்றுள்ளனர்.

“2023 டிசெம்பர் மாதமளவில் சமூக செலவுகள் தவிர்ந்த ஏனைய இலக்குகளை போதுமான அளவில் பூர்த்தி செய்ய இலங்கையால் முடிந்துள்ளது. எது எப்படி இருப்பினும் உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பில் இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொள்வதில் காணப்படும் தாமதத்தால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் எச்சரிக்கை நிலையிலேயே காணப்படுகின்றது.

“பொருளாதாரத்தை சரியான பாதைக்கு கொண்டுவருவதற்காக கடன் மறுசீரமைப்பு செயன்முறையை இலங்கை விரைவுபடுத்துவது அவசியமானது.” - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு 290 கோடி நீடிக்கப்பட்ட கடன் வசதியை தவணை அடிப்படையில் வழங்க ஐ. எம். எவ். முன்வந்திருந்தது. ஒவ்வொரு கடன் தவணையும் விடுவிக்கப்பட்ட பின்னர் இலங்கை ஏற்படுத்திக்கொண்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு அடுத்த கடன் தவணை விடுவிக்கப்படும்.

இந்த அடிப்படையில் மூன்றாவது தவணையாக தற்போது 336 மில்லியன் டொலரை ஐ. எம். எவ். இலங்கைக்கு விடுவித்துள்ளது. முன்னதாக 2 தவணைகளில் 667 மில்லியன் டொலர் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ் அரசு கட்சிக்கு ஐ.தே.கவும் வலை?

## விரைவில் பேச்சு நடத்த தீர்மானம்

கொழும்பு, ஜுன் 14


**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன பேச்சு நடத்தியுள்ள நிலையில், விரைவில் அந்தக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்தவுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறுபான்மை யினக் கட்சிகளின் ஆதரவை திரட்டும் பொறுப்பு அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன உள்ளிட்டவர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

எனவே, அவர்கள் தலைமைமி லான குழுவொன்றே விரைவில் தமி ழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்து வார்கள் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் கள மிறங்கும் முடிவை எடுத்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அபிவிருத்திப் பணிகளுக்கு தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்காக அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்காமல் உள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியத் தூதுவர் சுமந்திரன் சந்திப்பு



கொழும்பு, ஜுன் 14

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கொழும்பில் நேற்று முன் தினம் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி உட்பட்ட இரு தரப்பு இணைப்பு சம்பந்தமான பல தரப்பட்ட விடயங் கள் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# வாக்குகளை குறிவைக்கும் கட்சிகள் தமிழ் மக்கள் அவதானம் வேண்டும்!

## கோருகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜுன் 14

வாக்குகளைக் குறிவைத்துச் செயற்படும் அரசியல்வாதிகள் தொடர்பில் தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் மிகவும் அவதான மாகச் செயற்பட வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள் ளார்.

திடீரெனத் தமது கொள்கை களை மாற்றிக் கொள்ளும் சில அர சியல்வாதிகள் வாக்குகளைப் பெறு வதற்காகவே இவ்வாறு செயற்படு வதாகவும் அவர் கூறினார்.

தேர்தலுக்காக மட்டும் தங்கள் கொள்கைகளை மாற்றுபவர்கள் குறித்து தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டு மெனவும், ஆரம்பம் முதலே 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு ஆதரவளித்து வரும் கட்சிகளையும், அதனை எதிர்த்த கட்சிகளையும் தமிழ் மக்கள் அவ தானிக்க வெண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதர வளித்த அரசியல் கட்சிகள் தற் போது மாறிவிட்டதாகவும், குறித்த கட்சிகளின் இரட்டை வேடம் தற்போது வெளிப்பட்டுள்ளதாக வும் நாமல் மேலும் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்படும்!

கொழும்பு, ஜுன் 14

அரசமுறை வெளிநாட்டு கடன்மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு பேச்சுவார்த்தை இலங்கைக்கு சாதகமாக உள்ளதாகவும் வெகுவிரைவில் வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்படுமெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை மேற்கொண்டுள்ள செயற்திட்டம் குறித்து தேசிய மட்டத்திலான நிறுவனங்கள் வெளியிடும் மதிப் பாய்வு அறிக்கைகளில் உண்மைத் தன்மை கிடையா தென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் கூறினார். (அ)

# “கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்புக்கு அங்கீகாரம்!”

கொழும்பு, ஜுன் 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் கிராம உத்தி யோகத்தர்களின் புதிய சேவை யாப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக உள்நாட் டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

அவசியம் ஏற்படுமாயின் இந்தப் புதிய யாப்பில் திருத்தங்களைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்,“தற்போது, அரசாங்கம் “உறுமய” மற்றும் “அஸ்வெசும” உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் கிராமம் மற்றும் நகரங்களில் மீண் டும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு ஆதரவளிப்பது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே மக்களுக்கான கடமைகளை நிறைவேற்ற முடியுமான இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நமது கடமையை செய்ய வேண்டும்.

இந்த அமைச்சை பொறுப்பேற்ற போது நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால், நாம் தற்போது அரச சேவையை படிப்படியாக வலுப்படுத்தி யுள்ளோம். அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடி யாத நிலை காணப்பட்டது. தற்போது 1942 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர்களை நிய மிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது அவர் களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.”- என்றார். (ஐ)

# லண்டன் பயணமானார் அநுர!

## புலம்பெயர் தமிழர்களையும் சந்திக்கிறார்

கொழும்பு, ஜுன் 14

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க நேற்று வியாழக்கிழமை அதிகாலை லண்டன் பயணமானார்.

நாளை பிற்பகல் 2.00 மணிக்கு லண்டன் கிறிஸ்டர் கிராண்டில் முக்கிய பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள உள்ளார்.

இந்தப் பயணத்தில் இங்கிலாந்தில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுடனான பல வர்த்தக சந்திப்பு கள் மற்றும் சிநேகபூர்வ சந்திப்புகளை அநுரகுமார நடத்த உள்ளார்.

நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் தேசிய தேர்தல்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்க ளையும் இவர் நடத்த உள்ளார்.

இலங்கையில் தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் குறித்த சர்ச்சைகளுக்கு மத்தியில் தேர்தல் பிரச்சாரங்கள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் இந்திய அரசாங்கத்தின் உத்தி யோகபூர்வ அழைப்பை ஏற்று அநுரகுமார திஸா நாயக்க இந்தியாவுக்கு சென்றதுடன், அதன்பின் இலங் கையில் இருந்து தமிழ் மக்கள் அதிகமாக புலம் பெயர்ந்து வாழும் கனடாவுக்கும் அவர் சென்றிருந்தார்.

அங்குள்ள தமிழ் மக்களுடனும் அநுரகுமார சந்திப் புகளை நடாத்தியிருந்தார் என்பதுடன், அவர்களது அரசியல் அபிலாஷைகள் குறித்தும் அறிந்துகொண் டார்.

இதன்பின்னர் சுவீடனின் ஸ்டோக்கோமிலும் இலங்கை புலம்பெயர் சமூகத்தினரை சந்தித்திருந்தார். அவர் அதிகமாக புலம் பெயர் சமூகத்தினரிடையே பிரசாரங்கள் முன்னெடுத்து வருகின்றதை காணமுடி கின்றது.

கடந்த ஜனவரி மாதம் சுகாதார கொள்கை நிறுவனத் தால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் அநுர வுக்கான மக்கள் ஆதரவு 40 வீதமாக உயர்வடைந்துள்ள தாக தெரியவந்தது. (அ)

# மூடப்படும் தீப்பெட்டி நிறுவனங்கள் பலர் வேலை இழக்கும் அபாய நிலை!

கொழும்பு, ஜுன் 14

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு வகை லைட்டர் காரணமாக நாட்டில் உள்ள தீப் பெட்டி நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ள தாக நிறுவன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தரம் குறைந்த லைட்டர்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால் இலங்கையில் எஞ்சியுள்ள நான்கு தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலைகளும் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்டிக் லைட்டர்களில் எரிவாயு மூலம் தீப்பிடித்து, எரிவாயு தீர்ந்தவுடன் தூக்கி எறிவ தால் சுற்றுச்சூழல் மாசுபடுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் கள் கூறுகின்றனர்.

தற்போது கண்டி, பல்லேகல இலங்கை முதலீட்டு வலயத்தில் பரந்து விரிந்து கிடக்கும் தீப்பெட்டி தொழிற் சாலைகளில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படும் இலகுவான வர்த்தகம் நாட்டில் பரவி வருவதால் பலர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது.

எனவே இளைஞர்கள் மற்றும் பெண்களின் தொழில் துறையை பாதுகாக்குமாறு நிறுவனங்கள் மற்றும் நிறுவ னங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (அ)

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து!

கொழும்பு, ஜுன் 14

தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின தும் விடுமுறைகள் நேற்று நள்ளிரவு முதல் இன்று நள்ளி ரவு வரை இரத்து செய்யப்படுவதாக, தபால் மாஅதிபர் அறிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் 24 மணிநேர சுகயீன விடு முறை தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானம் செய்துள்ள நிலையில் இவ் அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, தபால் துறையில் நிலவும் 5,000 இற் கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்பத் தவறி யமை, உரிய பதவி உயர்வு வழங்காமை உள்ளிட்ட கோரிக்கை களை முன்வைத்து, இப்போராட்டம் முன்னெடுக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.